

# ஈழத்தில் பெரியார் முதல் அண்ணா வரை

நாவலர் ஏ.இளஞ்செழியன்

விகடன் பிரசுரம்

# நாவலர் ஏ.இளஞ்செழியன்



பெரியாரின் சுயமரியாதைக் கொள்கையை இலங்கை மலையகத் தமிழ்மக்கள் மத்தியில் முன்னெடுக்கும் தலைமைப் பொறுப்பு ஏற்றதுடன், அதனை நாடு தழுவிய இயக்கமாகப் பரிணமிக்கச் செய்தவர், நாவலர் ஏ.இளஞ்செழியன்.

பெரியாரால் தோற்றுவிக்கப்பட்ட திராவிட இயக்கம், தமிழ் மக்கள் குடியேறிய பெரும்பாலான நாடுகளுக்குப் பரவியது. குறிப்பிட்ட நாடுகளின் அமைப்பாளர்கள், தமிழக தி.க. மற்றும் தி.மு.க. தலைமைகளையே ஏற்றுச் செயல்பட்டனர். ஆனால், இளஞ்செழியன், பெரியார்-அண்ணா ஆகியோரின் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட போதிலும், தமிழகத் தலைமைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. மலையக மக்கள், யாரை தம்மைவிட உயர்வானவர்களாகக் கருதினரோ அவர்களை தமது மேடைக்கு அழைத்துவந்து அவர்களுடன் ஒப்பிட்டுப் பேசுவதன் மூலம், மலையக மக்கள் மத்தியில் நிலவிய தாழ்வுச் சிக்கலைப் போக்கினார்.

1949-ம் ஆண்டு முதல், இலங்கை திராவிடர் கழகத்தின் முழுநேர ஊழியராகச் செயல்பட ஆரம்பித்த இளஞ்செழியன், சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு என்பவற்றுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருந்த இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகத்தை, இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களது

அடிப்படை உரிமை, மொழியுரிமை தொடர்பாகப் போராடும் இயக்கமாக மாற்றினார். 1970 வரையில் இந்தச் செயல்பாட்டினை மேற்கொண்ட தோழர் இளஞ்செழியன், 1970 முதல் தம்மை இடதுசாரியாக அடையாளப்படுத்திக் கொண்டதுடன், 1972 முதல், ‘இளம் சோஷலிஸ முன்னணி’ என்னும் அமைப்பினை உருவாக்கிக் செயல்பட்டவர் ஆவார்.

# ஈழத்தில்

## பெரியார் முதல் அண்ணா வரை

நாவலர் ஏ.இளஞ்செழியன்

விகடன்
பிரசுரம்

Title :
EZHATHIL
PERIYAR MUDHAL ANNA VARAI
Author : ILLENCHELLIYAN
© P. MUTHULINGAM
ISBN : 978-81-8476-444-4

விகடன் பிரசுரம்: 678

நூல் தலைப்பு:
ஈழத்தில்
பெரியார் முதல் அண்ணா வரை

நூல் ஆசிரியர்:
எ.இளஞ்செழியன்

நூல் உரிமை:
© பெ.முத்துலிங்கம்

முதற்பதிப்பு : ஜூலை, 2012

விலை : ₹ 95

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

ஆசிரியர்:
இரா.சரவணன்

முதன்மை பொறுப்பாசிரியர்:
பொன்ஸீ

தலைமை உதவி ஆசிரியர்கள்:
எஸ்.கோபால், எம்.நாகமணி, கே.பாலமணி

உதவி ஆசிரியர்:
சிவராஜ்

முதன்மை வடிவமைப்பு:
மு.ராம்குமார்

தலைமை வடிவமைப்பு:
அ.அன்பழகன்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமர்சனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600 002.
எடிட்டோரியல் பிரிவு போன்: 044-2852 4074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-4263 4283 / 84
e-mail: pubonline@vikatan.com

# ஈழத்தின் விடிவெள்ளி!

பெரியார் முதல் அண்ணா வரை பல தமிழகத் தலைவர்களின் கொள்கைகளும், அவர்தம் நடவடிக்கைகளும், ஈழத் தமிழ் மக்களிடையே பிரதிபலித்து, அவர்களிடையே ஏற்படுத்திய மாற்றங்களை உள்ளடக்கி, நாவலர் ஏ.இளஞ்செழியன் எழுதிய இந்த நூல் ஒரு வரலாற்று ஆவணம்.

இலங்கை மலையக மக்கள் மத்தியில், பொதுவாக தமிழ்மக்கள் மத்தியில் நிலவிய மூடநம்பிக்கைகளைக் களையவும், பின்னர் அவர்கள் மத்தியில் அரசியல் தலைமையை உருவாக்கவும் மேற்கொண்ட முயற்சிகளை, ஏனைய வரலாற்றுச் சம்பவங்களுடன், இந்த நூலில் தமது அனுபவங்களாகப் பகிர்ந்துள்ளார், நாவலர் ஏ.இளஞ்செழியன்.

இன்றைய தலைமுறையினருக்குத் தெரியாத பல தகவல்கள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. இலங்கை அரசியல் வரலாறு அல்லது மலையக மக்களின் வரலாறு எழுதுபவர்கள், இந்திய வம்சாவளி மக்களிடையே நிலவிய போராட்ட வாழ்க்கையையும், இலங்கை அரசு கையாண்ட அடக்குமுறைகளையும், அவ்வப்போது இலங்கைக்குச் சென்ற தமிழகப் பேச்சாளர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் ஆகியோர் மக்களிடையே ஆற்றிய உரைகளையும் படித்துத் தெரிந்துகொள்ளலாம்.

மேலும், இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகத்துக்குத் தலைமை வகித்து, ஈழத்தின் விடிவெள்ளியாகத் திகழ்ந்த நாவலர் ஏ.இளஞ்செழியன், ஈழத் தமிழ்மக்களிடையே எத்தகைய அரசியல் விழிப்பு உணர்ச்சியை ஏற்படுத்தி உள்ளார் என்பதனையும் அறிய இந்த நூல் வாய்ப்பளிக்கிறது.

உலகெங்கும் பரவி வாழ்ந்துகொண்டு இருக்கும் தமிழ்மக்கள், இலங்கை மலையக மக்களின் வரலாற்றை அறியும் வகையில் இந்த நூலை, விகடன் பிரசுரம் தமிழ்ச் சமூகத்துக்கான பெரும் கடமையாக வெளியிடுகிறது.

- ஆசிரியர்

# அணிந்துரை



‘இலங்கையின் நாவலர்’ என அழைக்கப்பட்ட தோழர் ஏ.இளஞ்செழியன், தமது இறுதிக் கட்டத்தின் ஐந்து வருடங்களை எனது பாதுகாப்பின் கீழ், எமது நிறுவனத்திலேயே கழித்தார். இந்தக் காலக்கட்டத்தில் தமிழகத்திலிருந்து வருகை தந்த தோழர் வே.ஆனைமுத்து, எஸ்.வி.ஆர்.இராஜதுரை உள்ளிட்ட பல ஆய்வாளர்களையும் சந்தித்ததுடன் தமது செயல்திறன்மிக்க காலத்தை மீட்டுப் பார்ப்பதிலேயே பெரிதும் கழிக்கலானார்.

09.09.2007 அன்று மரணித்த தோழர் இளஞ்செழியன், இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் அவரைப் பராமரித்த நண்பர், ‘கோயிலுக்குப் போய்வருவோமா..?’ எனக் கேட்டபோது, ‘நீ வேண்டுமானால் கோயிலுக்குப் போ. எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லை. உன்னைப்போல் மூடநம்பிக்கை உள்ளவர்கள்தான் கோயிலுக்குப் போவார்கள்!’ என, என் முன்னால் திட்டினார். இந்தச் சம்பவத்தை ஏன் இங்கு நினைவுபடுத்துகிறேன் என்றால், பெரியாரின் கொள்கைகளை இளமைக் காலத்தில் பின்பற்றிய தலைவர்கள், பின்நாட்களில் மூடநம்பிக்கையில் மூழ்கிச் செயல்படும் வேளையில், இலங்கையில் பெரியாரின் திராவிடக் கொள்கைகளைப் பரப்பிய தோழர் இளஞ்செழியன தமது தள்ளாத வயதிலும், தமது கொள்கையில் இருந்து விடுபடாது, தன்னிகரற்ற கொள்கைப் பற்றுள்ள தலைவராக இருந்தார் என்பதனை எடுத்துக் கூறுவதற்காகத்தான்!

பெரியாரியவாதியாகத் தலையெடுத்து, ஈற்றில் மார்க்ஸியவாதியாக மறைந்த தோழர் இளஞ்செழியன்

இலங்கையின் அரசியல் வரலாற்றில், குறிப்பாக 1950 முதல் 1970 வரையிலான காலத்தில் சிங்கள இனவாதிகளின் பேச்சுப் பொருளாகக் காணப்பட்டார். அனைத்து சிங்கள அரசியல் மேடைகளிலும் இளஞ்செழியன், இனவாதியாகவும், நாம் தமிழர் இயக்கத்தின் இலங்கைத் தலைவராகவும், இலங்கையில் புரட்சி ஒன்றை மேற்கொள்ளத் தயாராகும் சதிகாரராகவும் குற்றம் சாட்டப்பட்டார்.

இலங்கையில் முதன்முதலில் இன ஒடுக்குமுறைக்கு ஆளானவர்கள், இந்தியாவிலிருந்து பிரித்தானிய காலனித்துவவாதிகளால் கொண்டு வரப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள்தான். இவர்களுக்குக் குடியுரிமை மறுக்கப்பட்டது. இதுவே, முதன்முதலாக இலங்கையின் சிங்கள அரசியல்வாதிகள் மேற்கொண்ட இனவாத நடவடிக்கை. இலங்கைத் தீவானது வந்தேறு குடிமக்களைக் கொண்ட நாடாகும். முதற் குடியேறிகள், இந்தியாவிலிருந்து இலங்கை வந்த சிங்களவர்களும், ஈழத் தமிழர்களும் ஆவர். அதன் பின்னர், அரேபியர்கள் வருகை தந்துள்ளனர். இவர்களது வருகையின் பின்னர், முறையே போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் இலங்கையின் ஆக்கிரமிப்பாளர்களாக வந்தடைந்தனர். அவர்களைத் தொடர்ந்து ஆங்கிலேயர், இலங்கையைக் கைப்பற்றியவுடன் மலையாளிகளும், இந்தியத் தமிழர்களும் குடியமர்த்தப்பட்டனர். இவ்வாறு குடியமர்த்தப்பட்டவர்களில் இறுதியாக தோட்டத்துறை மற்றும் நகரங்களில் குடியமர்த்தப்பட்ட பெரும்பான்மை இந்தியத் தமிழ்த் தொழிலாளர்களது குடியுரிமை, முதன்முதலில் குடியேறிய சிங்களவர்களால் பறிக்கப்பட்டது. அதற்கு, குடியமர்த்திய பிரித்தானியாவும் காரணமாக இருந்தது. 1871-ம் ஆண்டு பிரித்தானியரால் கொண்டுவரப்பட்ட கிராமச் சபைகளில் (பஞ்சாயம்) பங்குகொள்வதிலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் விலக்கப்பட்டனர். இந்தச் சபைக்கான தலைவர்களைத் தெரிவு செய்யும் வாக்குரிமையும் இவர்களுக்கு மறுக்கப்பட்டது. 1924-ம் ஆண்டு இந்தச் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின்போது தோட்டத் துரைமாருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது; தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த உரிமை மறுக்கப்பட்டது. பின்னர், 1948-ம் ஆண்டு, இலங்கையின் சுதந்திர அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமை சட்டத்தின் மூலம், இந்த மக்களது நாடற்றநிலை மேலும் உறுதிசெய்யப்பட்டது.

இன ஒடுக்கலுக்கு எதிராகப் பலர் குரல் எழுப்பியபோதும், 1948-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமை மறுப்புச் சட்டத்துக்கு எதிராக மக்களை அணிதிரட்டி, தொடர் போராட்டத்தை மேற்கொண்டவர் தோழர் ஏ.இளஞ்செழியன்தான். அவரது மக்கள் போராட்டங்கள், 1964-ம் ஆண்டு இந்தியாவும், இலங்கையும் இந்த விடயத்தில் மீண்டும் ஒரு புதிய ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட வழிகோளியது. இந்த வரலாற்று நிகழ்வுகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்ற அவாவின் விளைவே, தோழர் இளஞ்செழியன் எழுதிய 'ஈழத்தில் பெரியார் முதல் அண்ணா வரை' எனும் இந்த நூல். இந்த நூலுக்கான தலைப்பாக 'ஈழத்தில் பெரியார் முதல் அண்ணா வரை' என பெயரிடுகையில், 'இலங்கையில் இந்த இருவரும் எதனையும் முன்னெடுக்கவில்லையே... ஆகையால், நூலுக்கான இந்தத் தலைப்பு சரியல்ல!' என தோழர் இளஞ்செழியனிடம் கூறினேன். அதற்குப் பதில் அளித்த தோழர் இளஞ்செழியன், 'தமிழகத் தமிழர் எம்மைப் பற்றித் தெரிந்துகொள்வதற்காகவே இவ்வாறான தலைப்பை இடவேண்டும்' எனக் கூறினார். 'இனமோதல் போராக வளர்ந்துள்ள இந்த வேளையில் தமிழக மக்களது கவனத்தை, இலங்கை வாழ் இந்திய மலையக மக்கள்பால் ஈர்க்க வேண்டும் என்றால் இவ்வாறான தலைப்பையே இடவேண்டும்!' எனக் கூறினார். இளஞ்செழியனின் இந்தக் கூற்று எந்தளவு வெற்றி பெற்றது என்பது கேள்விக் குறியே. ஏனெனில், எம்மால் இந்த நூலினை தமிழகத்தில் அறிமுகம் செய்ய முடியாமல் போய்விட்டது. இந்தப் பின்புலத்தில் இலங்கையில் யுத்தம் முடிவடைந்த நிலையில் இந்த நூலினை மறுபிரசுரம் செய்ய முன்வந்த விகடன் பிரசுரத்துக்கு முதற்கண் நன்றி கூறிக்கொள்கிறேன்.

1971-ம் ஆண்டு, இலங்கையின் இடதுசாரி வரலாற்றினைப் பொருத்த வரை முக்கியமான ஆண்டாகும். 'சே குவேரா கிளர்ச்சி' என மக்களால் அழைக்கப்பட்ட ஏப்ரல் கிளர்ச்சி, 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்றது. தோழர் என்.சண்முகதாசனின் தலைமையின் கீழ் இயங்கிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ரோஹன விஜேவீர உருவாக்கிய மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) இந்தக் கிளர்ச்சியை மேற்கொண்டது. இந்தக் கிளர்ச்சியை இந்தியா, சீன மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் உதவியுடன் முறியடித்த இலங்கை அரசாங்கம், இதனை

மேற்கொண்டவர்களுக்கு எதிராக வழக்கு ஒன்றினை தாக்கல் செய்தது. இந்த வழக்கு இரண்டு வருடங்கள் தொடர்ந்தது. ஈற்றில், இந்த இயக்கத்துக்குத் தலைமை அளித்த ரோஹன விஜேவீரவுக்கும், அவரது சகாக்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. அந்தக் காலக்கட்டத்தில் மரண தண்டனையை அமல்படுத்தும் வழக்கம் இலங்கையில் நடைமுறையில் இருந்தது.

‘ரோஹன விஜேவீரவுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை ரத்து செய்யுங்கள் அல்லது ஆயுள் தண்டனையாக மாற்றுங்கள்’ என்னும் கருத்தினை, இருவர் கொழும்பில் முன்வைத்தனர். ஒருவர், தோழர்.ஏ.இளஞ்செழியன்; மற்றவர், தோழர் மல்லவராய்ச்சி என்ற சிங்களத் தோழர். கொழும்பில் தங்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கு ஆதரவாக மக்கள் மத்தியில் அறிவூட்டலை மேற்கொண்டு, மக்கள் எதிர்ப்பினை உருவாக்கும் முயற்சியில் இருவரும் நாடு முழுவதும் கூட்டங்கள் நடத்தினர். கொழும்புக்கு அடுத்ததாக, கண்டியில் முதலாவது கூட்டத்தினை ஒழுங்கு செய்தனர். இந்தக் கூட்டத்துக்கு ஆதரவு திரட்டும் வகையில் கண்டிக்கு வந்தவேளையில், தோழர் இளஞ்செழியன் நான் பணிபுரிந்த தொழிற்சங்க பணிமனைக்கு வந்து என்னைச் சந்தித்தார். இதுவே, எனக்கும் தோழர் ஏ.இளஞ்செழியனுக்கும் இடையிலான முதல் சந்திப்பு. தோழர் என்.சண்முகதாசன் தலைமையில் இயங்கிய செங்கொடிச் சங்கத்தில் பணியாற்றி கருத்து வேற்றுமை காரணமாக 1973-ம் ஆண்டு அதிலிருந்து பிரிந்து சென்ற தோழர் ஜயரத்ன மலியகொடவின் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை பொதுச் சேவையாளர் சங்கப் பணிமனையில் இந்தச் சந்திப்பு நடந்தது. அந்தக் காலக்கட்டத்தில் நான் தொழிற்சங்கத்தில் முழுநேர ஊழியராகக் கடமையாற்றினேன்.

பள்ளி மாணவனாக இருந்த வேளையில் 1968-ம் ஆண்டு, எனது சமய ஆசிரியர், ‘இளஞ்செழியன் என்பவர் திருத்த முடியாத கழுதைகளின் தலைவர். அதனாலேயே அதற்கு தி.மு.க என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது!’ எனக் கூறினார். இதுவே தோழர் இளஞ்செழியனைப் பற்றி நான் முதன் முதலாகக் கேட்ட செய்தி. எனினும், பின்நாட்களில் அவர்தான் இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என அறிந்து கொண்டதுடன், அவர் ஒரு சீர்திருத்தவாதி எனவும் கம்யூனிஸவாதி அல்ல எனவும் அறிந்துகொண்டேன். எனினும் அவருடன் தொடர்பினை

ஏற்படுத்திக் கொள்ளவில்லை. சீர்திருத்தவாதி ஒருவர் இடதுசாரி ஒருவருக்கு விதித்த மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற வேண்டும் என்னும் போராட்டத்தை மேற்கொள்ள முனைந்ததையிட்டு ஆச்சரியப்பட்டதுடன், 'ஏன் நீங்கள் இந்த முயற்சியில் ஈடுபடுகிறீர்கள்?' எனக் கேட்டேன். இந்தக் கேள்விக்கு அளித்த பதில் மூலம் தோழர் இளஞ்செழியன் அவர்கள் ரோஹன விஜேவீரவுடன் கொண்டிருந்த தொடர்பினையும் அறிந்து கொண்டேன். மேலும், தாம் தற்போது இடதுசாரி தத்துவத்தினைப் பின்பற்றி, இளம் சோஷலிஸ முன்னணி என்ற அமைப்பினை உருவாக்கி செயல்படுவதாகவும் கூறினார்.

அன்றுமுதல், தோழர் இளஞ்செழியனுடனான தொடர்பு தொடர்ந்தது. 1977-ம் ஆண்டு இனக்கலவரத்தின் பின்னர் இது மேலும் வலுப்பெற்றது. தோழர் இளஞ்செழியனின் தலைமையின் கீழ் செயல்பட்ட இலங்கை திராவிடர் கழகம் முன்னெடுத்த சாதி ஒழிப்பு உள்ளிட்ட சமூகச் சீர்திருத்த நடவடிக்கைகளையும், இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களது வாழ்வுரிமைப் போராட்டத்தில் இலங்கை தி.மு.க ஆற்றியுள்ள பங்கினைக் கண்டு வியப்புற்ற நான், இவற்றினைப் பதிவுசெய்ய வேண்டியதன் அவசியத்தைப் பற்றி எடுத்துக் கூறியதுடன் அதனை மேற்கொள்ள முனைவதாகவும் கூறினேன். 1983-ல் நடைபெற்ற இனக்கலவரத்தின் பின்னர் இந்திய வம்சாவளி மலையக மக்கள் தமிழகத்துக்குக் குடிபெயரக் காட்டிய ஆர்வத்தைக் கண்டு அதற்கு எதிராக செயல்படுவதன் அவசியத்தைப் பற்றி இருவரும் கலந்துரையாடினோம். இந்தச் சந்திப்பின் போதும் தி.மு.க.வின் செயல்பாடுகள் நூலுரு பெறுவதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தினேன்.

தோழர் இளஞ்செழியன் அதனை மேற்கொள்ளுமாறு கோரியபோதும் 1996-லேயே இந்த வாய்ப்பு கிட்டியது. 'எழுதாத வரலாறு' என்ற தலைப்பின் கீழ் தி.மு.க.வின் செயல்பாடுகளை நூலாகப் பதிவு செய்தேன். இலங்கை தி.மு.க-வின் வீறுமிக்க காலக்கட்டத்தின் வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கினேன். குறிப்பாக 1950 முதல் 1970 வரையிலான காலப் பகுதியை மட்டும் உள்ளடக்கினேன். 1972 முதல், இளம் சோஷலிஸ முன்னணி என்னும் அமைப்பினை உருவாக்கிச் செயல்பட்ட வரலாற்றையும் உள்ளடக்கும்படி தோழர் இளஞ்செழியன் கோரினார். இதனை மறுத்த நான் 1970-க்குப் பின்னரான

பதிவுகளை அவரையே மேற்கொள்ளும்படி கோரியதுடன், அதற்கு உதவுவதாகவும் கூறினேன். 'எழுதாத வரலாறு' நூலுரு பெற்ற பின்னர், அந்தப் பணியினை தோழர் இளஞ்செழியன் மேற்கொண்டார். அதன் வெளிப்பாடே 'ஈழத்தில் பெரியார் முதல் அண்ணா வரை' என்னும் இந்த நூல்.

1950 முதல் 1970 வரை இலங்கை அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய தோழர் இளஞ்செழியன், தமது இறுதிக் காலங்களில் ஐந்து வருடங்களை என்னுடன் கழித்ததுடன், இறுதிவரை தமது வயதினைக் குறிப்பிட விரும்பாத தோழர் இளஞ்செழியன், அவ்வப்போது கூறிய தகவல்களின்படி, 1942-ல் ஆவுடையப்பன் குமரன் என்ற பெயருடன் தமிழகத்தின் இராமநாதபுரம் செல்வராசன் கோட்டை என்னும் கிராமத்திலிருந்து கொழும்புக்கு வந்திருக்கிறார். தமது முறைப்பெண் ஒருவரை திருமணம் முடித்துவைக்க பெற்றோர்கள் முனைந்தமையினால் அதிலிருந்து தப்பிக்கவே இலங்கைக்கு வந்துள்ளார். முதலில், கொழும்பில் உள்ள ஒரு வீட்டில் பணியாளராக வேலை செய்த பின்னர் தமது ஊர்க்காரர்களான நா.அ.பழனிநாதன், எஸ்.கே.மாயக்கிருஷ்ணன் போன்றோருடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொண்டு, அவர்களின் அனுசரணையுடன், 'இலங்கை பெரியார்' என வர்ணிக்கப்பட்ட ஏ.எஸ்.ஜோன் அவர்களது மளிகைக் கடையில் பணியாற்றி உள்ளார். நா.அ.பழனிநாதன், எஸ்.கே.மாயகிருஷ்ணன் என்போர் இராமநாதபுரம் ஆதி திராவிட மகாஜன சங்கத்துடன் தொடர்பு கொண்டவராக இருந்துள்ளனர். இதேவேளையில், எஸ்.ஜோன் என்பவர் இலங்கையில் இருந்து 'பறையன்'என்னும் பெயரில் இதழ் ஒன்றினை வெளிக் கொணர்ந்து இருக்கிறார். இவர்களுடன் ஏற்பட்டத் தொடர்பே தோழர் இளஞ்செழியனை திராவிடர் இயக்கத்தின்பால் ஈர்ப்புக்கொள்ள வைத்துள்ளது எனக் கூறி இருக்கிறார்.

இறக்கும் வரை பெரியாரிய மார்க்ஸிய கொள்கைகளை ஆழமாகக் கடைபிடித்து வந்த தோழர் இளஞ்செழியனின் பங்களிப்பானது, இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையக மக்களது இன அடையாளத்துக்கு உரமிட்டது. தோழர் இளஞ்செழியனின் 'ஈழத்தில் பெரியார் முதல் அண்ணா வரை' என்ற நூல் இலங்கை வாழ் மலையகத் தமிழரின் அடிப்படை உரிமைக்கானப் போராட்ட வரலாற்றினை அறிந்துகொள்ள

வாய்ப்பளிக்கும். தமிழக மக்களைப் பொருத்த வரை ஈழத் தமிழர்களையும் அவர்களது போராட்டதைப் பற்றியுமே அறிந்துகொள்ள வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இந்த நூலை வெளிக்கொணர்வதின் மூலம் தமிழக மக்களுக்கு மலையகத் தமிழரைப் பற்றியும் அறிந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கும் எனக் கருத முடிகின்றது. இந்த நூலை வெளிக்கொணர அதிக அக்கறை காட்டிய தோழர் விஜயனுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளதுடன், விகடன் பிரசுரத்தின் ஆசிரியர் இரா.சரவணன் அவர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். தமிழகத்தின் தொப்புள் கொடி உறவினராக இருக்கும் ஈழத் தமிழரைப்போல் இன்னும் ஒரு தமிழ்ச் சமூகம் தொப்புள் கொடி உறவினராக இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர் என்பதனை அறிந்துகொள்வதற்கு இந்த இரண்டாம் பதிப்பு அடித்தளமிடும் என்பதில் ஐயமில்லை. குறிப்பாக, இலங்கையின் கடைசி வந்தேறு குடிமக்களான மலையக மக்களையும், அவர்களது பிரச்னைகளையும் தமிழக மக்கள் அடையாளம் காண இந்த நூல் வாய்ப்பு அளிக்கும். இது, தோழர் இளஞ்செழியனின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்வதாகவும் அமையும்.

- பெ.முத்துலிங்கம்

அரசியல் விமர்சகர்

இலங்கை

# என்னுரை

‘பெரியார் என்றால் அது சுயமரியாதை இயக்கம்; சுயமரியாதை இயக்கம் என்றால் அது பெரியார்’ என்பது உலகளாவியரீதியில் அனைவருக்கும் தெரியும். ஆயினும், நான் ‘ஈழத்தில் பெரியார் முதல் அண்ணா வரை’ என்ற இந்த வரலாற்று நூலுக்கு ஒரு சில வார்த்தைகளைக் கூறி பதிவுசெய்ய விரும்புகிறேன்.

இலங்கை என்கிற ஈழத்துக்கும், இந்திய மாநிலமான தமிழ்நாட்டுக்கும் 20 மைல்கள் வரை கடலால் பிரிக்கப்பட்டிருந்த போதும், தமிழ்நாட்டில் ஏற்படும் ஒவ்வொரு சம்பவமும் ஈழத்திலே தாக்கத்தை ஏற்படுத்தத் தவறியதில்லை.

அவ்வாறு, தமிழ்நாட்டில் உருவான பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் தோற்றுவாய், உலகம் முழுவதும் பரவிக்கிடந்த கோடான கோடி தமிழ்மக்களிடம் அலை வீசியது. ஈழத்திலே அதி விறுவிறுப்பும் வேகமும் கூடி இருந்தது.

இந்தக் காலக்கட்டத்திலே, நான் இளவயது உடையவனாக இருந்தபோது, காலை முதல் மாலை வரை வேலை செய்துவிட்டு இரவிலே கல்வி கற்பதைத் தொடருவேன். கொள்ளுப்பிட்டியில் உள்ள செயின்ட் மைக்கேல் இரவுப் பாடசாலையில் கல்வி கற்று வந்தேன். இளைஞனான நான் எதையும் தேடிப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்தேன். அப்போது என்னைவிட மூத்தவர்களான, பெரியாரின் கருத்துகளால் கவரப்பட்டவர்களான தமிழ்நாடு, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த செல்வராசன் கோட்டை நா.அ.பழனிநாதன்(கடவுள்), எஸ்.கே.மாயகிருஷ்ணன், செல்வராசன் கோட்டை, செம்பனூர் பெரியசாமி, எஸ்.வி.பெருமாள்(கல்லல்) இவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது.

இவர்கள், பெரியார் பற்றியும், அவருடைய சுயமரியாதை கருத்துகள் பற்றியும் என்னுடன் கலந்துரையாடுவார்கள்.

அவற்றை நான் செவிமடுத்த வண்ணம் இருப்பேன். தமிழகத்தில் இருந்து வெளிவரும் சுயமரியாதை இயக்கக் கருத்துகளைக் கொண்ட பெரியாரின் குடியரசு, விடுதலை ஆகிய பத்திரிகைகளைப் படிக்கும் வாய்ப்பும் எனக்கு ஏற்பட்டது.

பெரியாரின் சுயமரியாதைக் கருத்துகள் என் சிந்தனையைப் பெரிதும் பாதித்ததோடு அவற்றைப் பற்றிய தாக்கம் இளவயதிலேயே என் நெஞ்சில் ஆழமாகப் பதிந்தது. அவருடைய புரட்சிகரமான கருத்துகள் என் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. பெரியாரின் கருத்துகளால் ஈர்க்கப்பட்ட தோழர்கள் மூலம் பல்வேறு விடயங்களைத் தெரிந்துகொண்டேன். இவர்களின் மூலமே, இவர்களின் முன்னைய செயல்பாடுகளையும், பெரியாரின் இலங்கை வருகை பற்றியும், அவரின் சிறப்பு மிக்க உரையைப் பற்றியும் அறிந்துக் கொண்டேன்.

ஈழத்தில், திருநெல்வேலி ஆதி திராவிட மகாசன சங்கமும், இராமநாதபுர ஆதி திராவிட மகாசன சங்கமும், 1934-ம் ஆண்டு அளவில் பாப்பாரக்குடி பகுத்தறிவுக் கழகமும், 1937-ம் ஆண்டு பெரியார் ஈ.வெ.ரா. வாலிபர் பிரசார கழகமும் தொடங்கப்பட்டு, தொடர்ந்து இயங்கி வருவதாக, இந்த மூத்த தோழர்கள் மூலம் அறிந்து கொண்டேன்.

1940-ல், தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்த திரு.இராஜ கோபாலாச்சாரி அவர்கள், இந்தியை ஆட்சி மொழியாகக் கொண்டு வந்தார். பின்னர், குலக்கல்வி வருணாசிரம தர்ம முறையை கட்டாயப் பாடமாக்கினார். இதனை எதிர்த்து தமிழகத்திலுள்ள சகல இயக்கங்களும் ஒன்றுபட்டு பெரியார் தலைமையை ஏற்று, இந்தியை ஒழிக்கப் போராட்டம் நடத்தினார்கள். இந்தப் போராட்டத்தில் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் சிறை சென்றனர். இந்த வேளையில், ஈழத்தின் சார்பில் ஈ.வெ.ரா. பிரசார கழகம் நால்வரை இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு அனுப்ப முடிவு செய்தது. ஏ.டி.சுப்பையா, எஸ்.எம்.சிங்காரம், தமிழறிஞர் எஸ்.ஐ.சுப்பையா, கு.யா.திராவிடக்கழல் ஆகியோரைத் தெரிவு செய்தது. முதலில் ஏ.டி.சுப்பையா, எஸ்.எம்.சுப்பையா ஆகியோரை அனுப்பியது.

இவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றார்கள். பின் விடுதலையாகி இருவரும் இலங்கை

வந்தபோது இருவருக்கும் பெரியார் ஈ.வெ.ரா. வாலிபர் பிரசார கழகமும், பாப்பாரக்குடி பகுத்தறிவுக் கழகமும் இணைந்து பெரும் வரவேற்பு அளித்தது.

1949-ம் ஆண்டளவில் பெரியார்-மணியம்மை திருமணம் நடந்ததன் விளைவாக திரு.சி.என்.அண்ணாதுரை திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார். அதன் தாக்கம் ஈழத்தில் ஏற்பட்டபோது, இலங்கைத் திராவிடர் கழகம், திராவிடர் முன்னேற்றக் கழகம் எனும் பெயரினை ஏற்று, அதனை பிரகடனப்படுத்துவது என பலர் தங்கள் கருத்தை முன்வைத்தனர்.

அந்த வேளையில், தமிழகத்தைச் சார்ந்த திராவிடக் கழக உறுப்பினர்கள் திராவிட நாட்டினை குறிக்கோளாகக் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பெயரினை முன் வைத்தனர். இலங்கையைத் தாயகமாகக் கொண்ட எம்மால் அவ்வாறு செய்ய முடியாது. எனவே, நாம் இனத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகம் எனும் பெயரினையே பிரகடனப் படுத்தவேண்டும் எனக் கூறினேன். அந்தப் பெயர் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் என்னை பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட பின், இலங்கை தி.மு.க., நாடு தழுவிய இயக்கமாக விரிவடைந்தது. சுயமரியாதை இயக்கமாக இருந்த இந்த அமைப்பு எவ்வாறு கலாசாரப் புரட்சி இயக்கமாக ஈழத் தமிழ்மக்கள் மத்தியில் வளர்ச்சியுற்றது என்பதை விளக்குவதே இந்த நூலின் அடிப்படை நோக்கமாகும்.

இந்த நூலை வெளியிடுவதோடு, 1994-ம் ஆண்டு ‘நாவலர் ஏ.இளஞ்செழியன் அரசியல் பொன்விழா குழு’ அமைக்கப்பட்டது. இந்தக் குழுவின் தலைவராக பி.முத்துலிங்கமும், செயலளராக அந்தனி ஜீவாவும், நிதிச்செயலாளராக செல்வி க.மேனகாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நூலை வெளியிடுவதற்கான முயற்சிகள் 1960-ம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டது. 50 வருட வரலாற்றைக் கொண்ட இலங்கை திராவிடர் இயக்கத்தைப் பற்றிய ஆய்வு நூல் ஒன்றை, இந்த இயக்கத்தைச் சாராத பத்திரிகையாளரும்,

ஆய்வாளருமான கண்டி திரு.பெ.முத்துலிங்கம் 'எழுதாத வரலாறு' என்ற பெயரில் 1996-ம் ஆண்டில் வெளியிட்டது குறிப்பிடத் தகுந்ததோடு, இந்த நூலை எழுதுவதற்கு உந்துசக்தியாக அமைந்தது.

போர்வாள் ஆசிரியரும், தினபதி துணை ஆசிரியருமான க.தமிழ்மாறன், அந்தனிஜீவா, க.நவமணி, கவிஞர் மலைத்தம்பி, ஜெயராமன் ட்ரொஸ்கி, எல்.பி.சண்முகநாதன், மு.நேசமணி, மோகன் சுப்ரமணியம், பி.எம்.லிங்கம், ஜி.எல்.டி. கோவிந்தராஜன், ஜோசப் ஜேஸ்கொடி ஆகியோரும் இந்த நூலை தொகுப்பதற்கு அவ்வப்போது உதவி புரிந்தனர்.

இந்த நூலில் நான் எனக் குறிப்பிடுவதற்கு பதில் ஏ.இளஞ்செழியன் என்றே குறிப்பிடுகிறேன். ஏனென்றால், பதிவு செய்யப்பட்ட ஆவணங்களிலிருந்து இந்த நூலுக்குரிய ஆதாரங்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டது ஒரு காரணமாகும்.

ஈழத்தில் திராவிடர் இயக்கத்தின் 50 ஆண்டு கால களம், மிக விரிவானதும் ஆழமானதும் ஆகும். இதை ஓர் வரலாற்று ஆவணமாகக் கருதுகிறேன்!

- ஏ.இளஞ்செழியன்

## Thank You for previewing this eBook

You can read the full version of this eBook in different formats:

- HTML (Free /Available to everyone)
- PDF / TXT (Available to V.I.P. members. Free Standard members can access up to 5 PDF/TXT eBooks per month each month)
- Epub & Mobipocket (Exclusive to V.I.P. members)

To download this full book, simply select the format you desire below

Free-Ebooks.net